


# இழப்பீட்டுத் தொகை ரிம. 5,000 போதுமா?

## ஜின்ஜாங் செலாத்தான் தம்பாஹான் வியாபாரிகள் குமுறல்



கோலாலம்பூர், ஜூலை 10-

எங்களைக் கட்டாயமாக வெளியேற்ற நோட்டீஸ் கொடுத்தது நியாயமா எனக் கேட்டு தலைநகர் கோலாலம்பூரில் உள்ள ஜின்ஜாங் செலாத்தான் தம்பாஹானைச் சேர்ந்த 38 வியாபாரிகள் தங்கள் மனக்குமுறலை நேற்று வெளியிட்டனர். கோலாலம்பூர் மாநகர் மன்றம் அவர்கள் தங்கள் இடத்தைக் காலி செய்ய வேண்டும் என நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது.

### முதல் பக்கத் தொடர்ச்சி

### இழப்பீட்டுத் தொகை...

இதுமட்டுமன்றி எங்களுக்கு வெறும் 5,000 ரிங்கிட்தான் இழப்பீடு வழங்கப்படுகிறது என்றும் இது எங்களுக்கு மேலும் ஏமாற்றத்தைத் தருகிறது என்றும் ஜின்ஜாங் செலாத்தான் தம்பாஹான் வீடமைப்பு இழப்பீடு கோரிக்கை மீதான சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் அமிர்கான் பர்கத் அலி தெரிவித்தார்.

கடை உரிமையாளர்களுக்கும் வீடுகளின் உரிமையாளர்களுக்கும் 5,000 ரிங்கிட் இழப்பீடு தருவதில் நியாயமில்லை. அங்கு மேற்கொள்ளப்படும் பெரிய மேம்பாட்டுத் திட்டத்துடன் ஒப்பிடுகையில் இந்தத் தொகை எங்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை அளிக்கிறது என்றார் அவர். நாங்கள் 1969ஆம் ஆண்டு தொடங்கி இந்தப் பகுதியில் குடியிருக்கிறோம். இப்போது அங்குள்ள கடைவீடுகளின் மதிப்பு 3 லட்சம் ரிங்கிட் முதல் 4 லட்சம் ரிங்கிட் வரை உள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று செந்தூல் போலீஸ் தலைமையகத்தில் நடைபெற்ற நிருபர்கள் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். அங்குள்ள 57 கடை, வீடுகளின் உரிமையாளர்களுள் 57 பேரில் 38 பேருக்கு இடத்தைக் காலி செய்யும் நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் போலீசில் புகார் செய்திருக்கின்றனர். இழப்பீடு பிரச்சினை குறித்து பேச்சு நடத்தப்படும் என இதற்கு முன் கூட்டரசுப் பிரதேச அமைச்சரின் அலுவலகம் உறுதியளித்திருந்தது என்று அவர் கூறினார்.

ஆனால் இடத்தைக் காலி செய்யும் டிபிகேஎல் தரப்பு இப்போது நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது என்றார் அவர். ஆகவே போலீசார் வெளிப்படையான, நடுநிலையான விசாரணை நடத்த வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். நீதிமன்ற உத்தரவு மூலமாகத்தான் கட்டாய வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

சம்பந்தபட்ட உரிமையாளர்கள் அனைவருக்கும் டிஓஎல் எனப்படும் தற்காலிக குடியிருப்பு லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமன்றி சட்டப்பூர்வ வர்த்தக லைசென்ஸை இவர்கள் வைத்திருக்கின்றனர். வீட்டு மனை வரியும் நீர், மின்சாரக் கட்டணத்தையும் இவர்கள் செலுத்தியிருக்கின்றனர்.

இதற்கு முன் எங்களுக்கு நில கிராண்ட் (உரிமைப் பத்திரம்) வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார். இதற்கிடையே இதுபற்றி கருத்துகளைப் பெற டிபிகேஎல் தரப்புடன் தொடர்பு கொள்ள ஹரியான் மெட்ரோ முயற்சி செய்திருக்கிறது. இந்தப் பிரச்சினை தொடர்பில் பத்திரிகை அறிக்கை வெளியிடப்படும் என டிபிகேஎல் தரப்பு கூறியிருக்கிறது. (ஹரியான் மெட்ரோ)